# தென்னிந்திய சினிமாக்கள் முஸ்லிம் சிறார்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்: எலமல்பொத பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் ஆய்வு

# Impacts Caused By the South Indian Cinima among Muslim Children: A Research Based On Elamalpothe Area

**Miss. J. Fathima Minsara (1) and Mr. SMM. Mazahir (2)**

(1)Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.
(2)Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.
(fathimaminsara@gmail.com, mazahirsmm@gmail.com)

**ஆய்வுச் சுருக்கம்**

*கடந்த ஐம்பது ஆண்டுகளில் தென்னிந்திய சினிமா ஒரு சக்தி வாய்ந்த சாதனமாக உலகம் முழுவதும் வளர்ச்சி பெற்றுள்ளது. மக்களுடைய மனப்பாங்கையும் கருத்துக்களையும் சினிமா மாற்றி அமைப்பதுடன் அது குறிப்பாக சிறார்களின் அறிவு, ஆளுமை, ஆன்மீகம், ஒழுக்கம், பண்பாடு போன்றவற்றில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. இதன் காரணமாகவே சினிமா என்னும் மாபெரும் சக்தியின் முன்பாக அவர்கள் செயலிழந்து நிற்கின்றார்கள். இவ்வகையில் எலமல்பொத பிரதேச முஸ்லிம்கள் பல்லின கலாசார சூழலில் வாழ்கின்றவர்களாக இருப்பதினால் இப்பிரதேச முஸ்லிம் சிறார்களிடையே தென்னிந்திய சினிமாக்களின் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது. இலங்கையில் முஸ்லிம் சிறார்கள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் தென்னிந்திய சினிமாக்கள் எலமல்பொத பிரதேச முஸ்லிம் சிறார்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கங்களைக் கண்டறிவதற்கான முதல் முயற்சியாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுவதனாலும் முஸ்லிம் சிறார்கள் தென்னிந்திய சினிமாவினால் அடைந்துள்ள தாக்கங்கள் மற்றும் அதற்கு செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் என்பனவற்றை அடையாளப்படுத்துவதன் மூலமும் இவ்வாய்வானது முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. அத்துடன், இவ்வாய்வு தென்னிந்திய சினிமாக்கள் முஸ்லிம் சிறார்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் அதன் மூலம் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் கண்டறிதலை நோக்கமாகக் கொண்டுள்ளது. சமூகவியல், பண்புசார் ஆய்வான இதில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளாக ஆய்வுப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் சிறார்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் போன்றோரிடம் பெறப்பட்ட நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் என்பன உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுதொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

**கலைச் சொற்கள்:** *எலமல்பொத, முஸ்லிம் சிறார்கள், தென்னிந்திய சினிமாக்கள், தாக்கங்கள்*

## அறிமுகம் (Introduction)

கடந்த ஐம்பது ஆண்டுகளில் தென்னிந்திய சினிமா ஒரு சக்தி வாய்ந்த சாதனமாக உலகம் முழுவதும் வளர்ச்சி பெற்றுள்ளது. மக்களுடைய மனப்பாங்கையும் கருத்துக்களையும் சினிமா மாற்றி அமைப்பதுடன் அது குறிப்பாக சிறார்களின் அறிவு, ஆளுமை, ஆன்மீகம், ஒழுக்கம், பண்பாடு போன்றவற்றில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. இதன் காரணமாகவே சினிமா என்னும் மாபெரும் சக்தியின் முன்பாக அவர்கள் செயலிழந்து நிற்கின்றார்கள். இவ்வகையில் எலமல்பொத பிரதேச முஸ்லிம்கள் பல்லின கலாசார சூழலில் வாழ்கின்றவர்களாக இருப்பதினால் இப்பிரதேச முஸ்லிம் சிறார்களிடையே தென்னிந்திய சினிமாக்களின் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது.

இவ்வாறு தென்னிந்திய சினிமாக்கள் உலகில் அறிமுகப்படுத்தப்பட்ட காலம் முதலே அதன் தாக்கம் உலகின் பல்வேறு பகுதிகளிலும் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது. இன்றைய நவீன யுகத்தைப் பொறுத்தளவில் தென்னிந்திய சினிமாக்களுடைய தாக்கம் சிறார்கள் மத்தியில் எல்லை மீறிச் சென்றுள்ளதனை அவதானிக்கலாம். எனவே, இதனுடைய தாக்கம் எலமல்பொத பிரதேச முஸ்லிம் சிறார்கள் மத்தியிலும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று முஸ்லிம்களுடைய வாழ்க்கை இஸ்லாத்தை விட்டுத் தூரமாக்கிக் கொண்டிருப்பதோடு நவீன ஷைத்தானின் பக்கம் திரும்பிக் கொண்டிருக்கின்றது. மனிதர்கள் நாகரிகம் என்ற போர்வையில் அநாகரிகத்தைப்

பின்பற்றுகின்றனர். நவீன காலத்தைப் பொறுத்தவரையில் சிறார்கள் நவீனம் என்ற பெயரில் ஆபத்தை விலை கொடுத்து வாங்குகின்றனர். அதில் தென்னிந்திய சினிமாக்களும் குறிப்பிடத்தக்கன எனலாம். அந்தளவுக்கு அதன் ஆதிக்கம் முஸ்லிம் சிறார்களை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது. அதேவேளை அவை சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவருடைய உள்ளங்களையும் கொள்ளை கொள்பவையாக விளங்குகின்றன. அத்துடன் குறிப்பாக இன்றைய சமுதாயத்தினருக்குக் கிடைத்த மாபெரும் வரப்பிரசாதமாகவும் அவை திகழ்கின்றன.

### ஆய்வின் நோக்கங்கள் (Objectives of the Study)

- தென்னிந்திய சினிமாக்கள் முஸ்லிம் சிறார்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களைக் கண்டறிதல்.
- அவற்றினால் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களைக் கண்டறிதல்.
- முஸ்லிம் சிறார்கள் தென்னிந்திய சினிமாக்களினால் எதிர்கொள்ளும் சவால்களைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல்.

### ஆய்வின் முக்கியத்துவம்

இலங்கையில் முஸ்லிம் சிறார்கள், தென்னிந்திய சினிமாக்கள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் தென்னிந்திய சினிமாக்கள் எலமல்பொத பிரதேச முஸ்லிம் சிறார்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கங்களை கண்டறிவதற்கான முதல் முயற்சியாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுவதனால் இது முக்கியம் பெறுகின்றது.

ஆய்வுப்பிரதேச முஸ்லிம் சிறார்கள் தென்னிந்திய சினிமாவினால் அடைந்துள்ள தாக்கங்கள் மற்றும் அதற்கு செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் என்பனவற்றை அடையாளப் படுத்துவதாலும் இவ்வாய்வானது முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது.

தென்னிந்திய சினிமாக்கள் முஸ்லிம் சிறார்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள பாதிப்புக்கள் பல்வேறு விதமாக அமையலாம் அந்தவகையில் சமூக, சமய, கலாச்சார, மொழி, ஆன்மீக, ஒழுக்கவியல் தாக்கங்கள் குறிப்பிடத்தக்கன. அவற்றினைக் கண்டறிவதன் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு அடையச் செய்யலாம் என்றவகையில் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.

### ஆய்வுப் பிரச்சினை(Research Problem)

தென்னிந்திய சினிமாக்கள் எலமல்பொத முஸ்லிம் சிறார்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனவா? என்ற ஆய்வுக் கேள்வியே இவ்வாய்வின் ஆய்வுப் பிரச்சினையாக உள்ளது.

### ஆய்வு முறை(Research Methodology)

இவ்வாய்வு சமூகவியல், பண்புசார் ஆய்வாக அமையப் பெறுவதால் இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**முதலாம் நிலைத் தரவுகளாக:**ஆய்வுப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் சிறார்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் போன்றோரிடம் பெறப்பட்ட நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் இவ்வாய்வுக்குத் தேவையான தகவல்கள், தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள 10 வயது தொடக்கம் 16 வயது வரையுள்ள 100 சிறார்களை எழுமாறாகத் தெரிவு செய்து, வினாக்கொத்துக்கள் வழங்கி, அவர்களிடம் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**இரண்டாம் நிலைத் தரவுகளாக:** ஆய்வு தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

### இலக்கிய மீளாய்வு (Literature Review)

கே. எஸ்.சிவகுமார் என்பவர் எழுதிய 'சினமா! சினமா! ஓர் உலக வலம்' என்ற நூலில் இந்திய சினிமா, தமிழ் சினிமா தொடர்பான விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன்,அபூ மாலிக்,'சீரழிக்கும் சீரியலும் சினிமாவும் சீரழியும் முஸ்லிம் சமூகமும்' என்ற இணையத்தளக் கட்டுரையில் சினிமாவின் தாக்கங்கள் பற்றியும் சினிமா மூலம் இன்றைய முஸ்லிம் சமூகம் அடையும் விபரீதங்கள் பற்றியும் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஏ.பி.எம். இத்ரீஸ் எழுதியுள்ள'குழந்தைகளும் வாழ்வும்' என்ற நூலில் குழந்தைகளும் சினிமாவும் என்ற தலைப்பிலான விடயமொன்றை முன்வைக்கிறார். அதில் சினிமா மூலம் குழந்தைகள் பெற்றுக் கொள்ளும் சாதக, பாதக விளைவுகளை குறித்துக் காட்டியுள்ளார்.

மேலும், வெ. மு. ஷாஜஹான் கனி என்பவர் எழுதிய 'திரைப்படக் கலை' என்ற நூலில் திரைப்பட வரலாறு மற்றும் சினிமா தொடர்பான ஏனைய விடயங்களும் விளக்கப்பட்டுள்ளன. மற்றும் எம். சிவகுமார் எழுதிய 'சினிமா ஓர் அற்புத மொழி' என்ற நூலில் சினிமா தொடர்பான பல்வேறு விடயங்கள் விளக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எஸ். ராமகிருஷ்ணன் எழுதிய 'உலக சினிமா' என்ற நூலில் தென்னிந்திய சினிமா தொடர்பான பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும்,ப. பெரிய சுவாமி என்பவரால் எழுதப்பட்ட 'தமிழ் திரைப்படங்களின் அடிக்கருத்துக்கள்,

வளர்ச்சி, வரலாறு' என்ற நூலில் சினிமா தொடர்பான பல்வேறு விடயங்கள் விளக்கப்பட்டுள்ளதோடு வெளியாகியுள்ள திரைப்படங்களின் எண்ணிக்கை தொடர்பாகவும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறாக சினிமாக்கள், தொலைக்காட்சி தொடர்கள் முஸ்லிம் சிறார்கள் மத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்களை மதிப்பிடுவதற்காகப் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் குறிப்பாக எலமல்பொத பிரதேசத்தை மையப்படுத்தியதாக எதுவித ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை. அந்தவகையில் இவ்வாய்வு முன்னர் செய்யப்பட்ட ஆய்வுகளிலிருந்து முற்றிலும் வேறுபடுகின்றது.

**கலந்துரையாடல்களும் அடைவுகளும் (Discussion / Findings)**

இவ்வாய்வில் எலமல்பொத பிரதேசத்திலுள்ள எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட 100 முஸ்லிம் சிறார்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக 10 வயது தொடக்கம் 16 வயதுக்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரையும் அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் 50 ஆண் சிறார்களும் 50 பெண் சிறார்களும் இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன்,இவ்வாய்வுப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் சிறார்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களுடன் கலந்துரையாடியும் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இன்று தொலைக்காட்சி மூலம் இன்றைய இளம் தலைமுறையினர் மத்தியில் தென்னிந்திய சினிமாக்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதனால் ஏற்படுகின்ற தாக்கங்களை சீர்தூக்கிப் பார்க்கவேண்டிய அவசியமும் இன்றைய முஸ்லிம் சமுதாயத்திற்கு நிச்சயமாக இருக்கின்றது.


இன்றைய சினிமாக்கள் ஆண், பெண் எனஇருபாலாரையும் விலகிச் செல்ல முடியாத அளவிற்கு கட்டிப்போட்டுள்ளது. தெலைக்காட்சி மூலம் ஓரளவு நன்மைகள் இருந்தபோதிலும் அதிகமாக தீமைகளையே எமக்குப் பெற்றுத் தருகின்றது. பொய், கண்கட்டி வித்தை, செய்வினை, சூதாட்டம், மது, போதைப் பொருள் பாவனை, களவு, குறிகேட்பது, ஜோசியம் பார்ப்பது, பாலியல் வல்லுறவுகளுக்குத் தூண்டுதல், விபசாரத்திற்கு ஊக்கமளித்தல், காதலைத் தூண்டுதல், கட்டுப்பாடற்ற ஆண் - பெண் உறவாடல் என பல்வேறு விடயங்கள் இன்றைய சினிமாக்கள் வழியே ஒளிபரப்பப்படுவதைக் காணலாம். அதுமட்டுன்றி வன்முறைகளும் கொலைகளும் பெண்களை மானபங்கப்படுத்தும் காட்சிகளும் காட்டப்படுவதோடு கூட்டாக சேர்ந்து குற்றங்களில் ஈடுபடுதல், ஏமாற்றுதல், பழிவாங்குதல், மோசடி செய்தல், இலஞ்சம் வாங்குதல் போன்ற பல்வேறு காட்சிகளும் தாராளமாக சிறார்களுக்கு காண்பிக்கப்படுகின்றன.

இவ்வாறான அம்சங்கள் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி விடுகின்றன. குறிப்பாக இஸ்லாமிய அகீதாவோடு தொடர்பான விடயங்களிலும் ஈமானிலும் பாதிப்பை ஏற்படுத்தி விடுவதனைக் காணலாம். அதுமட்டுமன்றி இன்றைய சினிமாக்களைப் பார்ப்பவர்களின் மனங்களில் வக்கிர எண்ணங்களை உருவாக்குவதுடன் குற்றம் செய்யும் உணர்வுக்கு அடித்தளமிடுகின்றன. இன்றைய சிறார்களின் மனங்களில் தமது முன்மாதிரிகளாக கதாநாயகன் அல்லது கதாநாயகிகள் விளங்குவதைக் காணலாம்.

எனவே எலமல்பொத பிரதேசத்தில் முஸ்லிம் சிறார்களுக்கு வழங்கப்பட்ட 100 வினாக்கொத்துகளின் படி விபரங்கள் பின்வருமாறு:


இவ்வாய்வுப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் சிறார்களில் அதிகமானோர் தென்னிந்திய சினிமா பார்ப்பவர்களாகக் காணப்படுகின்றனர். அதில் ஓரிரு பெண் சிறார்கள் மாத்திரமே தென்னிந்திய சினிமா பார்க்காதவர்களாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

வரைபு: 01




அத்துடன், இங்குள்ள முஸ்லிம் சிறார்கள் வாரத்திற்கு சிலர் 01,02,03,05,07,30 சினிமாக்கள் என தமது நேரங்களைக் கழிப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். ஓரிரு சிறார்கள் தமது வாழ்வில் சில சினிமா நடிகர்களை முன்மாதிரியாகவும் கொண்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. அத்துடன், இவ்வாய்வுப் பிரதேசத்தில் வழங்கப்பட் 100 வினாக்கொத்துகளின் படி 98 பேரே தென்னிந்திய சினிமா பார்ப்பவர்களாக இருக்கின்றனர்.


வரைபு: 02




மேலும், அதிகமான சிறார்கள் விடுமுறை நாட்களிலேயே சினிமா பார்ப்பவர்களாகவும் ஒருசிலரே பாடசாலை நாட்களிலும் சினிமா பார்ப்பவர்களாகவும் இருக்கின்றனர். அத்துடன், இவ்வாய்வுப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் சிறார்களில் அதிகமானோர் இரவு நேரங்களிலேயே சினிமா பார்க்கின்றனர். சிலர் மாலை நேரங்களிலும் விடுமுறை நாட்களில் காலை, பகல் போன்ற வேளைகளிலும் சினிமா மூலம் தமது பொழுதைப் போக்கிக் கொள்வதைக் காணலாம்.


எலமல்பொத முஸ்லிம் சிறார்கள் சினிமா பார்க்கின்ற போதிலும் கல்வி விடயத்திலும் ஆர்வம் செலுத்துவதைக் காணலாம். இங்குள்ள சிறார்களில் 44% ஆனோர் கல்வியிலும் 30% ஆனோர் சினிமாவிலும் 24% ஆனோர் விளையாட்டிலும் 2% ஆனோர் கலை/ இலக்கியத்திலும் ஆர்வம் செலுத்துவோராக உள்ளனர். எனினும், சினிமா பார்க்கும் மோகமானது நாளடைவில் அவர்களது கல்வி நடவடிக்கைகளிலும் அவர்களது உளவியலையும் பாதிப்புறச் செய்யலாம் என ஊகிக்கப்படுகின்றது

வரைபு: 03




எலமல்பொத முஸ்லிம் சிறார்கள் தென்னிந்திய சினிமா பார்ப்பதன் மூலம் அவர்கள் பெற்றுக் கொள்ளும் நன்மைகளில் 63% ஆனோருக்கு பொழுதுபோக்காகக் காணப்படுகின்றது. அத்துடன் 07% ஆனோருக்கு அறிவை ஊட்டுவதாகவும் 06% ஆனோருக்கு சமூக விரோத செயல்களைச் சுட்டிக்காட்டுவதாகவும் 20% ஆனோருக்கு மகிழ்ச்சியைத் தருவதாகவும் 04% ஆனோருக்கு மன அழுத்தத்தைக் குறைப்பதாகவும் உள்ளதாக இவ்வாய்வு மூலம் அறியப்படுகின்றது. எனவே, அதிகமான சிறார்கள் தங்களுடைய பொழுதுபோக்காகவே சினிமாவைப் பார்க்கின்றனர் எனலாம்.

வரைபு: 04





உலகை ஒரு பொழுதுபோக்காக் கழிக்கும் காட்சியறையாக நினைத்து வாழும் இன்றைய நவீன சிறார்கள் தங்களுடைய நேரங்களில் அதிகமானவற்றை வீண் வேடிக்கைகளுக்கும் விளையாட்டுக்களுக்குமே செலவு செய்கின்றனர். அதிலும் அதிகமானோர் தொலைக்காட்சிக்கும் கணனிக்கும் முன் உட்கார்ந்து சினிமாவில் ஊறிப்போய் தங்களுடைய வாழ்க்கையைத் தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் நற்செய்திகள்,நாட்டு நடப்புக்கள், கருத்துக்கள், ஆரோக்கியமான தகவல்கள் எனப் பல்வேறு நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகின்றன. அந்தநிகழ்ச்சிகளைப் பார்ப்பதை இஸ்லாம் ஒரு போதும் தடைசெய்வதில்லை. மாறாக வீண் கேளிக்கைகளைப் பார்த்து வாழ்க்கையை சீரழித்துக் கொள்வதை இஸ்லாம் கடுமையாக எச்சரிக்கின்றது

மேலும், சிறுவர்களை கவர்வதற்காக சிறுவர் தொலைக்காட்சிகளும் சினிமாக்களும் மிகவும் வேகமாக இடம்பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவை ஒளிபரப்பப்படும் போது நிறங்கள் அதிகமானதாகவும் மிகவும் வெளிச்சம் நிறைந்ததாகவும் காட்டப்படும். காலப்போக்கில் சிறார்கள் இவற்றின் ஒளிபரப்பு வேகத்திற்கு இயல்படைந்து விடுகின்றனர். இதனால் வகுப்பறைகளில் ஆசிரியர்கள் பாடங்களை நடத்தும் போது அந்த பாடங்களை விரைவாக நடத்தி முடிக்க வேண்டுமென்ற குறுகிய

எண்ணமும் குறுகிய கவனமும் இளம் மாணவர்கள் மத்தியில் குடிகொள்ள ஆரம்பிக்கின்றது. எனவே, சிறார்கள் அதிக நேரம் பாடங்களில் கவனம் செலுத்த முடியாமல் திணறுகின்றனர். அத்துடன், தினமும் 5 மணி நேரமாக தொலைக்காட்சியைப் பார்ப்பவர்கள் ஒரு நாளைக்கு 120 கலோரிகள் கொழுப்பை தங்கள் உடம்பில் அதிகப்படுத்திக் கொள்கின்றனர் என ஆய்வுகள் கூறுகின்றன.

இவ்வாய்வுப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் சிறார்கள் தென்னிந்திய சினிமா பார்ப்பதின் மூலம் 40% ஆனோர் கல்வி பாதிப்படைவதாகவும் 43% ஆனோர் நேரம் வீணாகுவதாகவும் 04% ஆனோர் வீட்டுவேலை பாதிப்படைவதாகவும் 02% ஆனோர் நடை, உடை பாவனைகளில் மாற்றம் ஏற்படுவதாகவும் இன்னும் 02% ஆனோர் சினிமா கதாபாத்திரமாக வாழ்வதாகவும் 09% ஆனோர் தங்களுடைய தொழுகையைத் தடை செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளனர். எனவே, இங்குள்ள முஸ்லிம் சிறார்களுக்கு தென்னிந்திய சினிமாவானது அதிகமாக அவர்களுடைய நேரங்களை பாழ்படுத்துவதனூடான பல்வேறு தாக்கங்களையும் ஏற்படுத்தி விடுகின்றது. மேலும், இத்தகைய தென்னிந்திய சினிமாக்களைப் பார்ப்பதில் எலமல்பொத சிறார்களில் பெண் சிறார்களை விட ஆண் சிறார்களே அதிகமாக ஈடுபடுகின்றனர். இதன் காரணமாகவே இப்பிரதேசத்திலுள்ள ஆண் மாணவர்களை விட பெண் மாணவர்கள் அதிகளவில் கல்வியில் வளர்ச்சிபெற்று விளங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

வரைபு: 05




இவ்வாறு சினிமாக்களில் முஸ்லிம் சிறார்கள் ஈடுபடுவதன் மூலம் அவர்களுடைய அன்றாட கடமைகளைக் கூடி நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். அத்துடன், அவர்களுடைய நடை, உடை, பாவனைகள் எல்லாவற்றிலும் மாற்றம் ஏற்பட்டு அவர்கள் சினிமா கதாபாத்திரங்களாக தம்மை கற்பனை செய்து கொண்டு தமது வாழ்வை கேள்விக்குறியாக்கிக் கொள்கின்றனர். இது நாளடைவில் அவர்களை ஒரு பொய்யான கற்பனை உலகில் வாழ்வதற்கு வழியமைத்து விடுகின்றது. அதுமட்டுமன்றி முஸ்லிம் சிறார்களுடைய கல்வி மற்றும் மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதில் பல்வேறு தடைகளையும் பிரச்சினைகளையும் எதிர்கொள்வதோடு தங்களுடைய கருமங்களை ஆற்றிக் கொள்ளப் போதுமான நேரங்களைத் தொலைத்து விட்டும் தமது வாழ்வில் உள்ள பொன்னான நேரங்களை அறியமால் பராமுகமாக செயற்பட்டு திக்கற்று நிற்பதையும் காணலாம். அத்தோடு சிறுவர்கள் பல்வேறு சினிமாக்களைப் பார்ப்பதனூடாக உளவியல் தாக்கங்களுக்குட்படுவதுடன் மன அழுத்தத்துடன் தமது வாழ்வை எதிர்நோக்குகின்றவர்களாகவும் இருப்பதனை அறிய முடிகின்றது. மேலும், இவர்கள் அறிவியல் பூர்வமான செயற்பாடுகளிலிருந்து விலகி செயற்படுவதையும் காணலாம்.

வீணான தொலைக்காட்சித் தொடர்கள், குத்தாட்டங்கள், ஆபாச ஆடல், பாடல் காட்சிகள், வக்கிர நடனங்கள், ஆபாசப் பேச்சுக்கள், கபடம் நிறைந்த வார்த்தைகள் போன்றவற்றைப் பார்ப்பதால் சிறார்களுடைய எண்ணத்திலும் நடைமுறையிலலும் பல்வேறு கெட்ட சிந்தனைகள், பழக்கவழக்கங்கள், தீய பண்புகள் தோற்றம் பெறுவதற்கு இடமுண்டு என்பதை இன்றைய நவீன ஆய்வுகள் நிரூபிக்கின்றன.

அத்துடன், தென்னிந்திய சினிமா மூலம் ஏற்படும் பாதிப்புக்களில் மிக முக்கிய இடத்தை வகிப்பது முரட்டுத் தன்மை ஏற்படுவதாகும். தென்னிந்திய சினிமாக்களில் காட்டப்படும் கொடூர சண்டைக் காட்சிகள், கொலைகள், வன்முறைகள் போன்ற பல்வேறு விடயங்களைப் பார்வையிடுவதினால் சிறு வயது முதலே சிறார்கள் மனதில் முரட்டுக் காட்சிகள் கொஞ்சம் கொஞ்சமாக இடம்பிடித்து, அவர்களுடைய நிஜ வாழ்க்கையின் பகுதியாக மாறிவிடுகின்றது

தென்னிந்திய சினிமாக்கள் சிறார்களுக்கு ஒரு பொழுது போக்காக அமைவது மட்டுமலலாது அவர்களது எதிர்கால வாழ்வை சீரலிக்கும் விடயமாக அமையப் பெறுகின்றமை நிதர்சனமாகும். கல்வி, மார்க்க விடயங்களில் அதிக ஆர்வம் செலுத்தும் சிறார்களும் இத்தகைய சினிமாக்களின் தாக்கங்களினால் கவரப்பட்டு தமது வாழ்வை மட்டுமல்லாது கல்வியையும் சீரழித்துக் கொள்வது குறிப்பிடத்தக்கது. புத்தகம் வாசித்தல், குர்ஆன் ஓதுதல், பாடப்புத்தகங்களைப் படித்தல், நல்ல கட்டுரை, கவிதைகளை எழுதுல், பிறருக்கு படித்துக் கொடுத்தல், பெற்றோருக்கு உதவுதல், பிறருக்கு உதவுதல், பிறருக்கு நல்ல விடயங்களைச் சொல்லிக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளை பொழுதுபோக்காகக் கொண்டவர்கள் மிகவும் சிலரே இருக்கின்றனர்.

தென்னிந்திய சினிமாக்களை பார்ப்பதன் மூலம் முஸ்லிம் சிறார்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்தக் கூடிய பல்வேறு நடைமுறைகளை சிறார்கள் மத்தியில் செயற்படுத்த வேண்டும். இளம் சிறார்களை ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும் அதற்கான வளங்களையும் உரிய முறையில் வழங்குவோமானால் அவர்களுடைய எதிர்காலம் சிறந்த முறையில் அமையலாம். பிள்ளைகளை அறிவியல் பூர்வமான விடயங்கள், கண்டுபிடிப்புகள், கல்வி போன்றவற்றில் அதிகமாக ஈடுபட விட வேண்டும். இதற்கு ஆசிரியர்கள் மட்டுமன்றி அப்பிள்ளைகளது பெற்றோரும் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும். பிள்ளைகள் பெற்றோருக்கு வழங்கப்பட்ட அமானிதம் என்றவகையில் அவர்கள் தங்களுடைய பிள்ளைகளின் நலனில் அதிக கரிசைனையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

மேலும், வீண் வேடிக்கைகளையும் கூத்துகளையும் பார்ப்பதை விட்டும் குழந்தைகளுடைய எண்ணங்களை நல்ல விடயங்களின் பால் திசை திருப்ப வேண்டும். அந்தவகையில் மார்க்க விடயங்களில் அவர்களை ஈடுபடச் செய்யலாம். பயன்தரும் விடயங்களைக் கற்றுக் கொடுக்கலாம். அத்துடன், பலன் தரும் ஆக்கபூர்வமான கைப்பணிப் பொருட்களை உருவாக்குவதற்கு ஊக்கமளிக்கலாம். பயன் தரும் பொழுதுபோக்குகளில் ஈடுபடச் செய்யலாம். அத்துடன், அவர்களை உடற்பயிற்சி, மனதை ஒருமைப்படுத்தும் பயிற்சிகள், யோகா போன்றவற்றிலும் பயனளிக்கும் விளையாட்டுக்கள் போன்றவற்றிலும் ஈடுபட வைக்கலாம்.

மேலும், பல்வேறு தீய உணர்வுகளைத் தூண்டக் கூடிய படங்களை விடுத்து அவர்களுக் நல்லுணர்வுகளையும் அறிவுகளையும் நற்கருத்துக்களையும் ஊட்டக்கூடிய சினிமாக்களை வழங்கலாம். உதாரணமாக: ஈரானிய சினிமாக்களைக் குறிப்பிடலாம். அதுமட்டுமன்றி அவர்களை சமூகநலத் திட்டங்களில் ஈடுபடுத்தலாம். சமூக நலச் சேவைகள், பொதுநலப் பணிகள் என்பவற்றில் ஈடுபட அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்கி சமூகத்தில் அவர்களை சிறந்தவர்களாக உருவாக்கலாம்.

அத்துடன், சினிமாக்கள் பல்வேறு தீய தொலைக்காட்சித் தொடர்கள் மூலம் ஏற்படும் பாதிப்புக்கள் நிறந்தரமான அறிவுக்கு இட்டுச் சென்று விடும் என்பதையும் ஒரு முஸ்லிமுடைய ஈமானை பலவீனமடையச் செய்யும் என்பதையும் பிள்ளைகளுக்கு தெளிவுறுத்துவதுடன் அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் செயற்பாடுகளை ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும், சிறார்களுக்கென்ற ஊடகங்களை அறிமுகப்படுத்தி அவர்களை சிறந்த செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளினூடாக முஸலிம் சிறார்கள் சினிமா மூலமாக எதிர்கொள்ளும் சவால்களை நிவர்த்தி செய்யக் கூடியதாக அமையும்.

**முடிவுரை (Conclusion)**

இன்றையநவீன உலகில் பாரிய வளர்ச்சி பெற்று அனைத்து உள்ளங்களிலும் தாக்கம் செலுத்துகின்ற தென்னிந்திய சினிமா இன்றைய முஸ்லிம் சிறார்களையும் விட்டு வைக்கவில்லை. அந்தளவுக்கு சிறார்கள் மத்தியில் பல்வேறு விடயங்களில் ஆதிக்கம் செலுத்துவதனைக் காணலாம். அவர்களுடைய பண்பாடு, கலாச்சாரம், மொழி, நடை, உடை, பாவனைகள், உளவியல், கல்வி போன்ற பல்வேறு விடயங்களிலும் அது தாக்கம் செலுத்துவதனைக் காணலாம்.

இவ்வாறு தென்னிந்திய சினிமாக்கள் மூலம் சிறார்களுக்கு அதிகம் பாதிப்புகளே ஏற்படுகின்றது என்பதில் ஐயமில்லை. எனவே, சினிமாவின் சீர்கேட்டைத் தவிர்த்து நல்ல விடயங்களுக்கு மாத்திரமே தொலைக்காட்சியைப் பயன்படுத்திப் பயன்பெற வேண்டும். அத்துடன் சிறந்த விடயங்களை இளம் சமுதாயத்தினருக்கு எத்தி வைப்பதோடு அதனைக் கற்றுக் கொடுக்க வேண்டும். தென்னிந்திய சினிமா பார்ப்பதன் விபரீதங்கள் தொடர்ந்து செல்லுமாக இருந்தால் எமது இஸ்லாமிய பண்பாடு, கலாசாரத்தை விட்டு முழுமையாக மாறிவிடக் கூடிய ஒரு துர்ப்பாக்கிய நிலை உருவாக முடியும்.

**உசாத்துணைகள்**


1) இத்ரீஸ்.ஏ.பீ.எம்., 2011,குழந்தைகளும் வாழ்வும், சோனகம் பதிப்பகம்.
2) சிவகுமார்.எம்., 1997,சினிமா ஓர் அற்புத மொழி, சென்னை: சவுத் விஷன்.
3) சிவகுமார்.கே.எஸ்., 2006,சினமா! சினமா! ஓர் உலக வலம், கொழும்பு: மீரா பதிப்பகம்.
4) பெரிய சுவாமி.ப., 2003,தமிழ் திரைப்படங்களின் அடிக்கருத்துக்கள் வளர்ச்சி வரலாறு, சென்னை: சுமன் வெளியீடு.
5) ராமகிருஷ்ணன்.எஸ்., 2004,உலக சினிமா, சென்னை: கனவுப்பட்டறை.
6) ஷாஜஹான்.வெ.மு., 2011,திரைப்படக் கலை, சென்னை: உயிர்மைப் பதிப்பகம்.
7) அஸ்லம்.எம்.யூ., 2011, ஜுன்,“தொலைக்காட்சியா? வேண்டாம் ஆபத்து!”,உண்மை உதயம், இலங்கை: ஜமாஅத் அன்சாரி ஸுன்னத்தில் முகம்மதிய்யா.
8) அபூமாலிக், 15.12.2008,சீரலிக்கும் சீரியலும் சினிமாவும் சீரலியும் முஸ்லிம் சமூகமும்[Online].Available:http://tamil.webdunia.com/entertainment/film/featuresorarticles/1311/14/1131114008_1.htm, [2014.09.22].
9) ஷேக் அப்துல் காதிர்,21.08.2010,சின்னத்திரையும் வண்ணத்திரையும்,[Online].Available:http://www.nouralislam.org/tamil/islamkalvi/general/television_and_cinema.htm,[2014.09.22, [2014.09.22].
10) அன்வர்தீன்.எம், 21.08.2010,உணரப்படாத தீமை - சினிமா!,[Online].Available:http://suvanathendral.com/portal/?p=1669,[2014.09.22].